(அஊ) பல்லாவரம் தொகுதி, இரயில்வே சுரங்கப்பாதை, சாலைப் பணிகள் தொடங்குதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. இ. கருணாநிதி அவர்கள்.*

திரு. இ. கருணாநிதி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல்லாவரம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பல்லாவரம் நகராட்சி, ராதாநகர்–குரோம்பேட்டை இரயில்வே சுரங்கப்பாதை LC 27–ல் 2010 ஆம் ஆண்டில் இரயில்வே துறை சார்பான பணிகள் முடிக்கப்பட்டன. ஆனால், இதுநாள் வரை இந்த அரசின் சார்பான பணிகள் தொடங்கப்படவில்லை. மேலும், பம்மல்–அனகாபுத்தூர் நான்கு வழிச் சாலையை அகலப்படுத்த வேண்டுமென்றும் கோரியிருந்தேன். அந்தப் பணியும் இன்னும் நடைபெறவில்லை என்பதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்தை ஈர்த்து அமர்கின்றேன்.*

(அஎ) சோழவந்தான் தொகுதி, கழிவு நீர்க் கால்வாய் அமைத்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கி. மாணிக்கம் அவர்கள்.*

திரு. கி. மாணிக்கம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சோழவந்தான் தொகுதி, வாடிப்பட்டி பேரூராட்சியில் கழிவு நீரும், மழை நீரும் ஒன்றாகக் கலந்து, வீடுகளுக்குள் புகக்கூடிய நிலைமை ஏற்படுகிறது. எனவே, கழிவு நீர்க் கால்வாய் கட்டி, அதன்மூலம் கழிவு நீரை வெளியேற்ற அரசு ஆவன செய்ய வேண்டுமென்று மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்தை ஈர்க்கிறேன்.*

(அஏ) நாரணபுரம், பிராம்மண குளத்திலுள்ள காற்றாலையை அகற்றுதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் (திருமதி) பூங்கோதை அவர்கள்.*

***டாக்டர் (திருமதி) பூங்கோதை:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாரணபுரம் 100 சதவிகிதம் தேவேந்திரகுல வேளாளர்கள் வாழ்கின்ற ஒரு கிராமம். அங்குள்ள பிராம்மண*

குளத்தின் நீர்ப்பிடிப்புப் பகுதியில் காற்றாலை ஒன்று விதிகளை மீறி அமைந்துள்ளது என்பதற்காக தொடர் போராட்டங்கள் நடைபெற்று வருகின்றன. தயவுசெய்து, அந்தக் காற்றாலையை உடனடியாக அகற்ற வேண்டுமென்று தங்கள் வாயிலாக அரசின் கவனத்தை ஈர்த்து அமர்கிறேன்.

(அஐ) கீழ்பெண்ணாத்தூர், வேட்டவலம் கிராமம், மர்மக் காய்ச்சலைத் தடுத்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. பிச்சாண்டி அவர்கள்.*

***திரு. கு. பிச்சாண்டி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதியான கீழ்பெண்ணாத்தூரில் உள்ள வேட்டவலம் அருகே உள்ள தண்டரை கிராமத்தில் 2016 ஆம் ஆண்டில் மர்மக் காய்ச்சல் ஏற்பட்டு ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 8 பேர் மரணமடைந்தனர். சிறுவன் சரண் என்பவன் நேற்று மரணமடைந்திருக்கிறான். இது தொடர்பாக வழக்கு பதிவு செய்யப்பட்டு, பாஸ்பரஸ் இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. ஆனால், இதுவரை அந்த வழக்கிலே பாஸ்பரஸ் இருப்பது கண்டுபிடிக்கப்படவில்லை. எனவே, இறந்தவர்களின் குடும்பத்திற்கு நிவாரணம் வழங்கவும், அங்கு இருக்கின்ற மர்மக் காய்ச்சலைத் தடுப்பதற்கும் மருத்துவக் குழு அங்கு சென்று தனது பணிகளைச் செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.*

(அஒ) அரக்கோணம் நகர், பாதாளச் சாக்கடைத் திட்டப் பணிகளைத் துரிதப்படுத்துதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. ரவி அவர்கள்.*

திரு. சு. ரவி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதிக்குட்பட்ட அரக்கோணம் நகரில் 2½ வருடங்களாக பாதாளச் சாக்கடைத் திட்டப் பணிகள் நடைபெற்று வருகின்றன. இந்தப் பணிகளால் தெருக்களெல்லாம் சிதிலமடைந்துள்ளன. அந்தப் பணிகளைத் துரிதப்படுத்தி, தெருக்களைச் சீரமைக்க ஒரு சிறப்பு நிதியை உருவாக்கி, சீரமைத்துத் தர மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்தை ஈர்த்து அமர்கிறேன்.*